TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213087

1. District மாவட்டம் : திருநெல்வேலி | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு (PS: காவல் நிலையம்) | Year ஆண்டு: 2024 | FIR No. மு.த.அ. எண்: 04/2024 | Date நாள்: 30.05.2024

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Cr.PC | Sections பிரிவுகள்: 7(a) r/w 102 Cr.PC
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 29.05.2024 | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் 10.00 hrs to | Time to : நேரம் வரை 19.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.05.2024 | Time நேரம் : 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 18 கி.மீ மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், பேட்டை, திருநெல்வேலி மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் செ.கலைமதி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.M.இளங்கோ
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.1968 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி திருநெல்வேலி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு.மு.ஜோதிகுமார், சார் பதிவாளர் பொறுப்பு பேட்டை சார் பதிவாளர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்.
2) திரு.அ.அன்சர் பாதுஷா, த/பெ.அப்துல் மஜித், கதவு எண்.4/495, வி.ஓ.சி நகர், சுத்தமல்லி, திருநெல்வேலி மாவட்டம்.
3) திரு.அ.நாசர், த/பெ.அப்துல் மஜித், கதவு எண்.4/493, வி.ஓ.சி நகர், சுத்தமல்லி, திருநெல்வேலி மாவட்டம்.
4) திரு.அ.முருகன், த/பெ.அம்சன், கதவு எண்.1/352, பெரியார் நகர், சுத்தமல்லி, திருநெல்வேலி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not Arise

10. Total value of properties stolen / involved : Not Arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: Not Arise
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 30.05.2024-ம் தேதி சுமார் 10.00 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி D.ராபின் ஞானசிங் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.செ.கலைமதி அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 29.05.2024-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர், செ.கலைமதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், பெறுனர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்டம், பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக. திருநெல்வேலி மாவட்டம், பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பொறுப்பு, சார்பதிவாளர் திரு.மு.ஜோதிகுமார் அவர்கள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பொதுமக்களிடமிருந்து லஞ்சப்பணத்தை வசூல் செய்து,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. E. ........... Rank ... Addl. V..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS. ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 30.5.24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(signature) 30/5/24

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30/05/24 @ 10.30hrs

Name: பெயர் D. Robin Gnanasingh
Rank: நிலை Inspector of Police .......... No. எண்
VAC, Tirunelveli

மேற்படி ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணத்துடன் அவர் மேற்படி அலுவலகத்தில் இருந்து TN 59 BV 6721 Hero Splender Pro என்ற இருசக்கர வாகனத்தில் புறப்பட இருந்தவரை கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் மேற்படி பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் மாலை 19.30 மணி முதல் 23.45 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் திரு.மு.ஜோதிகுமார் என்பவரிடமிருந்து பணம் ரூ.5,000/-ம், தனிநபரான திரு.அ.அன்சர் பாதுஷா என்பவர் கையில் வைத்திருந்த காவி நிற பிளாஸ்டிக் பையில் இருந்த பணம் ரூ.1,44,500/-மும், தனிநபரான திரு.அ.நாசர் என்பவரிடமிருந்து பணம் ரூ.6,900/-ம் மற்றும் மற்றொரு தனிநபரான திரு.அ.முருகன் என்பவரிடமிருந்து பணம் ரூ.5,300/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.1,61,700/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை நேற்று (29.05.2024) மாலை 19.30 மணிக்கு ஆரம்பித்து இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே மேற்படி அலுவலகத்தில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் திரு.மு.ஜோதிகுமார் மற்றும் மூன்று தனிநபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sir, Received the complaint today on 30.05.2024 at 10.00 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.04/2024 u/s 7(a) of PC Act, 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 Cr.PC on 30.05.2024 at 10.00 hrs Sd.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli dt 30.05.2024. Proceedings பின்வருமாறு:- 29.05.2024-ம் தேதி திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லி, பெரியார் பேருந்து நிறுத்தத்தின் தெற்கு பக்கம் உள்ள வெயிலுந்தம்மன் ரோட்டின் கிழக்கு பக்கம் மேற்கு பார்த்து அமைந்துள்ள பேட்டை சார்பதிவக அலுவலகத்தில் திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.செ.கலைமதி அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : 1) திருமதி.செ.கலைமதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். 2) திரு.D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. இன்று 29.05.2024-ம் தேதி திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திருநெல்வேலி மாவட்டம், பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பொறுப்பு சார் பதிவாளர் திரு.மு.ஜோதிகுமார் அவர்கள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பொதுமக்களிடமிருந்து லஞ்சப்பணத்தை வசூல் செய்து, மேற்படி ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து அவர் மேற்படி அலுவலகத்தில் இருந்து TN 59 BV 6721 Hero Splender Pro என்ற இருசக்கர வாகனத்தில் புறப்படும் போது வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் இன்று மாலை 17.00 மணி முதல் தொடர்ந்து கண்காணித்ததில்

தனது வழக்கமான அலுவலை முடித்துக் கொண்டு தனது TN 59 BV 6721 Hero Splender Pro என்ற இருசக்கர வாகனத்தில் 19.30 மணியளவில் பேட்டை சார் பதிவாளர் அலுவலக வளாகத்தை விட்டு அவரது வீட்டிற்கு கிளம்ப தயாராக இருந்தவரை நிறுத்தி, திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காவல் ஆய்வாளர் அவர்கள் மற்றும் போலீஸ் பார்டி சகிதம் பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரத்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் சார் பதிவாளர் அவர்களிடம் தெரிவித்து, பேட்டை சார் பதிவாளர் அவர்களை மேற்படி சார் பதிவாளர் அலுவலகம் அழைத்து வந்து, அவரை அவரது இருக்கையில் அமர சொல்லிவிட்டு. மேற்படி பேட்டை சார் பதிவாளர் அலுவலக வராண்டாவில் நின்ற பின்னால் பெயர் முகவரி கேட்டு தெரிந்து கொண்ட திரு.அ.அன்சர் பாதுஷா, த/பெ.அ.அப்துல் மஜித், கதவு எண்.4/493, வி.ஓ.சி நகர், சுத்தமல்லி மற்றும் அவரது தம்பி திரு.அ.நாசர் என்பவர்களில் திரு.அ.அன்சர் பாதுஷாவை விசாரணை செய்தபோது தன்னுடைய தந்தை திரு.அப்துல் மஜித், பத்திர எழுத்தராக இருப்பதாகவும், அவருக்கு உதவியாக வேலை செய்துகொடுப்பதாகவும், திரு.அப்துல் காதர் என்பவருக்கு பத்திரம் பதிவு செய்வது தொடர்பாக வரைவு ஆவணத்தை சரிபார்க்க சார் பதிவாளரை பார்க்க வந்ததாகவும் சொன்னார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவர் கையில் வைத்திருந்த காவி நிற பிளாஸ்டிக் கவரில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் பணக்கத்தைகளாக மொத்தம் ரூ.1,44,500/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணமாக இருக்கலாம் என கருதி ரூ.1,44,500/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி காவி நிற பிளாஸ்டிக் கவரில் (1) சிலரது பெயர் மற்றும் பணவிரங்கள் குறிப்பிட்ட குறிப்புகள் அடங்கிய சுமார் 14 x 10 செ.மீ அளவுள்ள மஞ்சள் நிற அட்டை. (2) சிலரது பெயர் மற்றும் செல்போன் எண் மற்றும் சில குறிப்புகள் அடங்கிய சுமார் 12 x 9 செ.மீ அளவுள்ள மஞ்சள் நிற அட்டை. (3) 29.05.24 என்று பென்சிலால் எழுதப்பட்டு சிலரது பெயர் மற்றும் பணவிரங்கள் குறிப்பிட்ட சுமார் 12 x 10 செ.மீ அளவுள்ள வெள்ளைநிற துண்டு பேப்பர். (4) 28.05.24 என்று பென் மற்றும் பென்சிலால் எழுதப்பட்டு சிலரது பெயர் மற்றும் பணவிரங்கள் குறிப்பிட்ட குறிப்புகள் அடங்கிய சுமார் 12 x 10 செ.மீ அளவுள்ள வெள்ளைநிற துண்டு பேப்பர் ஆகியவை காணப்பட்டது. மேற்படி நான்கு துண்டு சீட்டுகளும் விசாரணைக்காக மேற்படி காவி நிற பிளாஸ்டிக் பையுடன் கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.அ.நாசர் என்பவரை விசாரணை செய்த போது அவரது அண்ணனுக்கு உதவியாக வந்ததாக சொன்னார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பேண்டின் இடது பின்பக்க பாக்கெட்டில் இருந்த பர்சில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.6,900/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணமாக இருக்கலாம் என கருதி ரூ.6,900/- கைப்பற்றப்பட்டது.

பின்னர் மேற்படி சார் பதிவாளர் அலுவலக வராண்டாவின் தெற்கு பக்க வாசல் வழியாக உள்ளே நுழைந்து தெற்கில் இருந்து வடக்காக உள்ள இருக்கையில் இருந்த சார் பதிவாளர் திரு.மு.ஜோதிகுமார் என்பவரை சோதனை செய்ய, அவர் அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.5,074/-ஐ

எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலக தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்த போது அவர் ரூ.74/-ஐ மட்டுமே குறிப்பிட்டிருந்தபடியாலும் மீதம் இருந்த பணம் ரூ.5,000/- பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததாலும் மேற்படி பணம் ரூ.5,000/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது.

பின்னர் சார் பதிவாளர் இருக்கைக்கு எதிர்புறம் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டு தெரிந்த அலுவலக உதவியாளர் திரு.ச.கிருஷ்ண சேர்மன் என்பவரை சோதனை செய்ய , அவர் அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1,360/-ஐ மட்டும் எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்தப்பணம் என்று சொன்னார். அதனை தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்த போது, தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் ரூ.2,360/- என குறிப்பிட்டிருந்தார். மீதி பணம் ரூ.1,000/- குறித்து திரு.ச.கிருஷ்ண சேர்மன் என்பவரிடம் கேட்க அவர் மேற்படி பணம் ரூ.1,000/-ஐ அலுவலகத்திற்கு வந்திருக்கும் கம்பியூட்டர் சர்வீஸ் இன்ஜினியர் திரு.தங்கராஜ் அவர்களிடம் கொடுத்திருப்பதாக சொன்னார். எனவே அவர் ஆஜர் செய்த பணம் ரூ.1,360/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

பின்னர் மேற்படி அலுவலக உதவியாளர் திரு.ச.கிருஷ்ண சேர்மன் என்பவர் அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டு தெரிந்த தனிநபரான திரு.அ.முருகன், த/பெ.அம்சன், கதவு எண்.1/352, பெரியார் நகர், சுத்தமல்லி என்பவரை விசாரணை செய்த போது அவர் சுத்தமல்லியில் உள்ள பிரசன்னா சாய் என்ற பத்திர எழுத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிவதாகவும், இன்று தங்கள் அலுவலகம் மூலம் பதிவு செய்த பத்திரம் தொடர்பாக விசாரிக்க வந்ததாகவும் சொன்னார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பேண்டின் இடது முன்பக்க பாக்கெட்டில் இருந்த பர்சில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.5,300/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால், மேற்படி பணம் மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணமாக இருக்கலாம் என கருதி ரூ.5,300/- கைப்பற்றப்பட்டது.

மேற்படி சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட இளநிலை உதவியாளர் திரு.வீ.தெளதும் வீரபாண்டியன் என்பவரை சோதனை செய்ய அவர் அவரது பேண்டின் வலது முன்பக்க பாக்கெட்டில் இருந்த பர்சில் வைத்திருந்த பணம் ரூ.216/-ஐ மட்டும் எடுத்து ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்று சொன்னார். அது தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் இளநிலை உதவியாளருக்கு வடக்கு பக்கம், மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட கேமரா ஆப்பரேட்டர் திருமதி.பி.செல்வி என்பவரை சோதனை செய்ய அவர் அவரது கைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.510/-ஐ மட்டும் எடுத்து ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்று சொன்னார். அது தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் இளநிலை உதவியாளர் இருக்கையின் பின்புறம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட கம்பியூட்டர் சர்வீஸ் இன்ஜினியர் திரு.வே.தங்கராஜ் என்பவரை விசாரணை செய்ய, அவர் மேற்படி அலுவலக கணிணியை AMC மூலம் பழுது பார்க்க வந்ததாக

சொன்னார். அவரை சோதனை செய்ய அவர் அவரது பேன்டின் இடது முன்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணம் ரூ.4,200/-ஐ மட்டும் எடுத்து ஆஜர் செய்து. அதில் பணம் ரூ.3,200/- தனது சொந்தப்பணம் என்றும், ரூ.1,000/- பணத்தை மேற்படி அலுவலக உதவியாளர் திரு.கிருஷ்ண சேர்மன் தந்ததாக சொன்னார். மேற்படி மொத்த பணம் ரூ.4,200/-ம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

பேட்டை, பொறுப்பு சார் பதிவாளர் திரு.மு.ஜோதிகுமாரிடம் இன்று பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் இன்றைய கணக்கு குறித்து கேட்டபோது, அவர் கணினியில் இருந்து எடுத்த கணக்கு A, C, D, CD fees, Sub Division, Birth and Death, Section 41, Tamilnadu Marriage, Hindu Marriage, Document Writer Welfare Fund, Flag Day Collection ஆகிய தலைப்புகளில் பதிவுகள் செய்யப்பட்டதாகவும், அதற்கு ஆன்லைன் மூலமாக பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதன்படி A தலைப்பில் ரூ.2,89,000/-ம், C-தலைப்பில் ரூ.4,686/-ம், D- தலைப்பில் ரூ.15,006/-ம், CD fees தலைப்பில் ரூ.6,000/-ம், Sub Division தலைப்பில் ரூ.12,800/-ம், Section 41 தலைப்பில் ரூ.5,45,000/-ம், Tamilnadu Marriage தலைப்பில் ரூ.150/-ம், Hindu Marriage தலைப்பில் ரூ.145/-ம், Document Writer Welfare Fund தலைப்பில் ரூ.580/-ம், Flag Day Collection தலைப்பில் ரூ.1,500/-ம், Birth and Death தலைப்பில் ரூ.700/-ம் ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், பணமாக எந்த கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி ஆன்லைனில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கான விபரங்களை (5 தாள்கள்) கணினியில் பிரிண்ட் எடுத்து வைத்திருந்ததை ஆஜர் செய்தார். பதிவு வைப்பறையில் இருந்த இரும்பு பேழையை திறந்து பார்க்க அதில் நிரந்தர வைப்புத்தொகை ரூ.250/- மட்டும் இருந்தது. அதை சரிபார்த்து சார் பதிவாளர் திரு.மு.ஜோதிகுமார் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை மூலம் மொத்த பணம் ரூ.1,61,700/- கைப்பற்றப்பட்டு இன்று (29.05.2024) இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். செ.கலைமதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் 9 பேர்.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli District and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

30/5/24
D. Rabin Gnanasingh
Insp. DVAC Rabin
VAC, Tirunelveli.